தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

CODE - DTA13

UNIT - V

9. குற்றியலுகரப் புணரியல்

# 9. குற்றியலுகரப் புணரியல்

தனித்தன்மையுடன் விளங்கும் தமிழ் எழுத்துக்களுள் குறிப்பிடத்தக்கது குற்றியலுகரம் ஆகும். இது மொழிக்கு முதலாகவும் ஈறாகவும் வரும் சிறப்புடையது. தமிழில் குற்றியலுகரத்தை ஈறாகக் கொண்ட சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. குற்றியலுகரம் ஒன்றாயினும் அது ஈற்று அயலெழுத்தை அடிப்படையாகக் கொண்டு ஆறாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவ்அறுவகைக் குற்றியலுகரமும் நிலைமொழியாக நிற்கும். அவற்றுடன் பொருட்பெயர், அளவுப் பெயர், நிறைப் பெயர், எண்ணுப்பெயர் போன்ற பல்வகைப் பெயர்கள் புணரும். அப்புணர்ச்சியை விரிவுபடக் கூறுவதால் இவ்வியல் **குற்றியலுகரப் புணரியல்** எனப் பெயரிடப் பெற்றது. இதன்கண் அமைந்த நூற்பாக்களை இளம்பூரணர் **77** ஆகவும் நச்சினார்க்கினியர் **78** ஆகவும் கொண்டு உரை வகுத்துள்ளனர்.

இவ்வியலில் அமைந்த செய்திகளைக் 1. குற்றியலுகரத்தின் வகைகள 2. குற்றியலுகர ஈறுகள் பெறும் சாரியை 3. எண்ணுப் பெயர்கள் புணரும் முறை 4. புறனடை என்னும் நான்கு பிரிவுகளில் பகுத்துக் காணலாம்.

## குற்றியலுகரத்தின் இயல்பும் வகையும் (6)

**407. ஈரெழுத்து ஒருமொழி[1] உயிர்த்தொடர்[2] இடைத்தொடர்[3]**
**ஆய்தத் தொடர்மொழி[4] வன்தொடர்[5] மென்தொடர்[6]**
**ஆஇரு மூன்றே உகரம் குறுகிடன்.**

**(இ-ள்)** *1.* இரண்டு எழுத்தால் ஆகிய ஈரெழுத்து ஒருமொழி (நெடில் தொடர்மொழி) *2.*உயிர்த்தொடர் மொழி *3.* இடைத்தொடர் மொழி *4.* ஆய்தத் தொர்டர் மொழி *5.* வன்தொடர் மொழி *6.* மென்தொடர் மொழி எனக் குற்றியலுகரத் தொடர் அறுவகைப்படும். இவ்வறுவகைத் தொடர்களின் இறுதியிலும் வரும் உகரம் ½ மாத்திரை அளவினதாகக் குறுகி ஒலிக்கும். **(எ-டு)**

| | | |
|---|---|---|
| 1. ஆடு | - | ஈரெழுத்து ஒருமொழி |
| 2. படகு | - | உயிர்த்தொடர் |
| 3. மூழ்கு | - | இடைத்தொடர் |
| 4. கஃசு | - | ஆய்தத்தொடர் |
| 5. எழுத்து | - | வன்தொடர் |
| 6. அம்பு | - | மென்தொடர் |

## ஈரொற்றுத் தொடர்களுக்குப் பெயரிடும் முறை

**408. அவற்றுள்**
**ஈர்ஒற்றுத் தொடர்மொழி இடைத்தொடர் ஆகா.**

[இ-ள்] மேற்கூறிய தொடர்கள் சிலவற்றின் இடையில் இரண்டு மெய்யெழுத்துக்கள் இணைந்து நிற்கும். அவை இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஆகா. [எ-டு]

ஈர்க்கு; பீர்க்கு → வன்தொடர்க் குற்றியலுகரம்
நொய்ம்பு; மொய்ம்பு → மென்தொடர்க் குற்றிய்லுகரம்

### விளக்கம்

குற்றியலுகரத் தொடர்மொழிகளின் இடையில் இரண்டு மெய்யெழுத்துக்கள் சேர்ந்து நிற்பதுண்டு. அவ்விடங்களில் முதல் மெய் இடையின எழுத்தாக நிற்கும். அவ்வெழுத்தைக் கொண்டு அத்தொடரை இடைத்தொடர்க் குற்றியலுகரம் எனக் கூறக்கூடாது. உகரம் ஏறிய ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தைக் கொண்டே அத்தொடருக்குப் பெயரிட வேண்டும். (2)

## அல்வழி, வேற்றுமையில் குற்றியலுகரத்தின் நிலை

**409. அல்லது கிளப்பினும்[1] வேற்றுமைக் கண்ணும்[2]**
**எல்லா இறுதியும் உகரம் நிலையும்.**

[இ-ள்] மேற்கூறப்பட்ட குற்றியலுகரங்கள் ஆறு. அவை நிலைமொழியாய் நின்று வருமொழியுடன் 1.அல்வழி 2.வேற்றுமை என்னும் இருவகையிலும் புணரும். அப்போது நிலைமொழியின் ஈற்றில் நிற்கும் உகரம் தனக்குரிய 1 மாத்திரையில் இருந்து ½ மாத்திரையாகக் குறுகி ஒலிக்கும். [எ-டு]

1. நாகு+கடிது → நாகுகடிது; வரகு+கடிது → வரகுகடிது (அல்வழி)
2. நாகு+கடுமை → நாகு கடுமை ;வரகு+கடுமை → வரகு கடுமை (வேற்றுமை) (3)

## புணர்மொழிக் குற்றியலுகரத்திற்குரிய மாத்திரை

**410. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்**
**தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே.**

[இ-ள்] வன்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லெழுத்தினை முதலாக உடைய சொல் வந்து புணரும். அவ்விடத்து முன்பு கூறிய விதிப்படி (நூ.37) குற்றியலுகரம் ½ மாத்திரையாக ஒலிக்கும். [எ-டு]

கொக்கு + கடிது → கொக்குக்கடிது
கொக்கு + கடுமை → கொக்குக்கடுமை

இளம்பூரணர் ½ மாத்திரை பெறும் எனக் காட்டுவதை மறுத்து நச்சினார்க்கினியர் ¼ மாத்திரை பெறும் எனக் கூறுகிறார். (4)

உ - வந்தால் மிகும்.

## புணர்மொழியில் குற்றியலிகரம் தோன்றுதல்

**411. யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது.**

[இ-ள்] அறுவகைக் குற்றியலுகரமும் நிலைமொழியாக நிற்க வருமொழியில் யகரத்தை முதலாக உடைய சொல் வந்து புணரும். அவ்விடத்து நிலைமொழியின் உகரம் முழுவதுமாகக் கெடும். அந்நிலையில் ஓர் இகரம் தோன்றும். அவ்இகரம் 1 மாத்திரை அளவினதாக ஒலிக்காமல் ½ மாத்திரையாகக் குறுகி ஒலிக்கும். [எ-டு]

நாடு+யாது → நாட்+உ+யாது → நாட்+இ+யாது → நாடியாது
வரகு+யாது→வரக்+உ+யாது→வரக்+இ+யாது→வரகியாது. (5)

## ஒற்று இரட்டிக்கும் குற்றியலுகரத் தொடர்கள்

**412. ஈரெழுத்து மொழியும்[1] உயிர்த்தொடர் மொழியும்[2]
வேற்றுமை ஆயின் ஒற்றுஇடை இனமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி.**

[இ-ள்] 1.நெடில் தொடர்க் குற்றியலுகரமாகிய ஈரெழுத்து ஒருமொழி 2.உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆகிய இரண்டும் நிலைமொழியாக நிற்கும். அவை வல்லெழுத்தினை முதலாக உடைய வருமொழியோடு வேற்றுமைப் பொருண்மையில் புணரும். அப்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்றில் நிற்கும் உகரம் ஏறிய ஒற்று (ட், ற்) இடையில் மிகும். வருமொழிக்கேற்ற வல்லினமும் வரும். [எ-டு]

1. ஆடு+தால் → ஆட்டுக்கால்; ஆறு+தண்ணீர் → ஆற்றுத்தண்ணீர்
2. வயிறு+பசி → வயிற்றுப்பசி; கிணறு+தவளை →கிணற்றுத்தவளை (6)

## ஒற்று இரட்டாச் சொற்களுக்குச் சிறப்பு விதி

**413. ஒற்றுஇடை இனமிகா மொழியுமார் உளவே
அத்திறத்து இல்லை வல்லெழுத்து மிகலே.**

[இ-ள்] மேற்கூறப்பட்ட ஈரெழுத்து ஒருமொழி, உயிர்த்தொடர்மொழி ஆகியவற்றின் இடையில் இனஒற்று மிகாத சொற்களும் உள்ளன. அவ்விரு தொடர்களின் முன்னரும் வல்லெழுத்தினை முதலாக உடைய சொல் வந்தாலும் வல்லினம் மிகாமல் இயல்பாகப் புணரும். [எ-டு]

நாகு+கால் → நாகுகால்
வரகு+கதிர் → வரகுகதிர் } இயல்பு (7)

## வல்லினம் மிகா குற்றியலுகரத் தொடர்மொழிகள்

**414. இடையொற்றுத் தொடரும்[1] ஆய்தத் தொடரும்[2]
நடைஆ இயல என்மனார் புலவர்.**

[இ-ள்] 1. இடைத்தொடர்க் குற்றியலுகரம் 2.ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் ஆகியவை நிலைமொழியாக நிற்கும்.

அவற்றொடு வல்லினத்தை முதலாக உடைய சொற்கள் வந்து புணரும். அப்புணர்ச்சியில் வல்லினம் மிகாமல் இயல்பாகப் புணரும்.

[எ-டு] 1. தெள்கு + கால் → தெள்குகால்
2. எஃகு + கால் → எஃகுகால் } இயல்பு

(தெள்கு - தெள்ளுப்பூச்சி). (8)

## வல்லினம் மிகும் குற்றியலுகரத் தொடர்மொழிகள்

**415. வன்தொடர் மொழியும் மென்தொடர் மொழியும்**
**வந்த வல்லெழுத்து ஒற்றுஇடை மிகுமே[1]**
**மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்று எல்லாம்**
**வல்லொற்று இறுதி கிளைஒற்று ஆகும்.[2]**

[இ-ள்] 1.வன்தொடர்க் குற்றியலுகரமும் மென்தொடர்க் குற்றியலுகரமும் நிலைமொழியாக நின்று வல்லெழுத்தினை முதலாக உடைய சொற்களுடன் புணரும். அவ்விடத்து வருமொழிக்கேற்ற வல்லெழுத்து மிகும் 2. மென்தொடர்க் குற்றியலுகரத்தின் இடையில் உள்ள மெல்லெழுத்துத் தனக்கு இனமாகிய வல்லெழுத்தாகத் திரிந்து புணரும். [எ-டு]

1. கொக்கு+கால் → கொக்குக்கால் (வன்தொடர்)
2. குரங்கு+தலை → குரக்குத்தலை (மென்தொடர்)

சில இடங்களில் மென்தொடர் குற்றியலுகரத்தின் முன் நிற்கும் ணகாரத்திற்கு டகாரம்; னகாரத்திற்கு றகாரம் ஆகியவை கிளையெழுத்தாக வரும். [எ-டு]

எண்கு+குட்டி → எட்கு+குட்டி → எட்குக்குட்டி
அன்பு+தளை → அற்பு+தளை → அற்புத்தளை

(எண்கு - கரடி). (9)

## குற்றியலுகர ஈற்று மரப்பெயர் 'அம்' சாரியை பெறுதல்

**416. மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை.**

[இ-ள்] மேற்கூறப்பட்ட வன்தொடர், மென்தொடர் குற்றியலுகர ஈற்று மரப்பெயர்கள் நிலைமொழியாக நின்று வல்லெழுத்தை முதலாக உடைய வருமொழியுடன் புணரும். அவ்விடத்து அம் சாரியை தோன்றும். [எ-டு]

தேக்கு+கட்டை → தேக்கு+அம்+கட்டை → தேக்கங்கட்டை
வேம்பு+கிளை → வேம்பு+அம்+கிளை → வேப்பங்கிளை (10)

## மென்தொடர்க் குற்றியலுகர ஈற்று மரப்பெயர் புணரும் முறை

**417. மெல்லொற்று வலியா மரப்பெயரும் உளவே.**

[இ-ள்] மெல்லின ஒற்றுக்கள் வல்லினமாகத் திரியாத மரப்பெயர்களும் உள்ளன. அவை புணர்ச்சியில் முற்கூறப்பட்ட அம் சாரியை பெற்று முடியும். [எ-டு]

குருந்து+கிளை → குருந்து+அம்+கிளை → குருந்தங்கிளை
புன்கு+தழை → புன்கு+அம்+தழை → புன்கந்தழை (11)

## 'அம்' சாரியை பெறும் குற்றியலுகரத் தொடர்கள்

**418. ஈரெழுத்து மொழியும்[1] வல்லொற்றுத் தொடரும்[2]**
**அம்இடை வரற்கும் உரியவை உளவே**
**அம்மரபு ஒழுகும் மொழிவயி னான.**

[இ-ள்] 1. நெடில் தொடர்க் குற்றியலுகரம் 2. வன்தொடர்க் குற்றியலுகரம் ஆகிய இரண்டிலும் அம் சாரியை பெறுவனவும் உள்ளன. அவற்றை அம்மரபு பொருந்தி வரும் சொற்களைக் கொண்டு அறியலாம். [எ-டு]

1. ஏறு+கோல் → ஏறு+அம்+கோல் → ஏறங்கோல்
2. வட்டு+போர் → வட்டு+அம்+போர் → வட்டம்போர் (12)

## 'அக்கு'ச் சாரியை பெறும் தொடர்மொழிகள்

**419. ஒற்றுநிலை திரியாது அக்கொடு வரூஉம்**
**அக்கிளை மொழியும் உளஎன மொழிப.**

[இ-ள்] மென்தொடர்க் குற்றியலுகரச் சொற்களுள் சில அக்குச் சாரியை பெறும். அவ்விடத்து அச்சொற்களின் இடையில் நிற்கும் ஒற்றுத் திரியாமல் நின்று புணரும். [எ-டு]

மன்று+பெண்ணை → மன்று+அக்கு+பெண்ணை → மன்றப்பெண்ணை
குன்று+கூகை → குன்று+அக்கு+கூகை → குன்றக்கூகை (13)

## எண்ணுப் பெயர்கள் பெறும் சாரியை

**420. எண்ணுப் பெயர்க்கிளவி உருபியல் நிலையும்.**

[இ-ள்] குற்றியலுகரத்தை ஈறாக உடைய எண்ணுப்பெயர்கள் நிலைமொழியாக நிற்கும். அவை வல்லெழுத்தை முதலாக உடைய வருமொழிகளுடன் முன்பு உருபியலில் கூறிய விதிப்படி (நூ.199) அன் சாரியை பெற்றுப் புணரும். [எ-டு]

ஒன்று+காயம் → ஒன்று+அன்+காயம் → ஒன்றன்காயம் (14)

## 'வண்டு', 'பெண்டு' என்பன பெறும் சாரியை

**421. வண்டும்[1] பெண்டும்[2] இன்னொடு சிவணும்.**

[இ-ள்] 1. வண்டு 2. பெண்டு என்பன பொருட்பெயர்கள். இவை மென்தொடர்க் குற்றியலுகரங்களாகும். இச்சொற்கள் நிலைமொழியாக நின்று வருமொழியுடன் புணரும் போது இன் சாரியை பொருந்தி நிற்கும். [எ-டு]

1. வண்டு+கால் → வண்டு+இன்+கால் → வண்டின்கால்
2. பெண்டு+கால் → பெண்டு+இன்+கால் → பெண்டின்கால் (15)

### 'பெண்டு' என்னும் சொல் 'அன்' சாரியை பெறுதல்

422. **பெண்டுஎன் கிளவிக்கு அன்னும் வரையார்.**

[இ-ள்] மேற்கூறப்பட்டவற்றுள் பெண்டு என்பது உயர்திணைப் பெண்பாற் பெயராகும். இப்பெயர் புணர்ச்சியில் 'இன்' சாரியை பெறுவதோடு 'அன்' சாரியை பெற்றும் முடியும். அவ்அன் சாரியை பெறுவதை நீக்கமாட்டார். [எ-டு]

பெண்டு+கை → பெண்டு+அன்+கை → பெண்டன்கை (16)

### வினாப்பெயரும் சுட்டுப்பெயரும் புணரும் முறை

423. **யாதுஎன் இறுதியும்[1] சுட்டுமுதல் ஆகிய**
**ஆய்த இறுதியும்[2] உருபியல் நிலையும்.**

[இ-ள்] 1. யாது என்பது குற்றியலுகர ஈற்று வினாப்பெயர் 2.அஃது, இஃது, உஃது என்பன சுட்டெழுத்தை முதலாக உடைய குற்றியலுகர ஈற்றுச் சுட்டுப்பெயர். அவ்விரண்டும் நிலைமொழியாய் நின்று வேற்றுமைப் பொருண்மையில் புணரும் போது முன்பு உருபியலில் கூறிய விதிப்படி (நூ. 201) அன் சாரியை பெறும். சுட்டுப்பெயரில் உள்ள ஆய்தம் கெடும். [எ-டு]

யாது+கோடு → யாது+அன்+கோடு → யாதன் கோடு
அஃது+கோடு → அஃது+அன்+கோடு → அதன்கோடு (17)

### உயிர்க்கணத்தின் முன் ஆய்தம் கெடாது நிற்றல்

424. **முன்உயிர் வரும்இடத்து ஆய்தப் புள்ளி**
**மன்னல் வேண்டும் அல்வழி யான.**

[இ-ள்] சுட்டெழுத்தினை முதலாக உடைய ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் அஃது, இஃது, உஃது என்பனவாகும். அவை நிலைமொழியாய் நின்று உயிரெழுத்துக்களை முதலாக உடைய சொற்களுடன் அல்வழிப் பொருண்மையில் புணரும். அப்போது ஆய்தம் கெடாமல் நிலைபெறுதல் வேண்டும். [எ-டு]

அஃது + அடை → அஃதடை; இஃது + ஆடை → இஃதாடை; உஃது + இலை → உஃதிலை (உயிர்க்கணம்) (18)

### ஆய்தத் தொடரில் ஆய்தம் கெடுதல்

425. **ஏனைமுன் வரினே தான்நிலை இன்றே.**

[இ-ள்] ஆய்தத் தொடர்க் குற்றியலுகரத்தின் முன் உயிர்க்கணம் அல்லாத பிற கணங்கள் வந்து புணரும். அவ்விடத்து நிலைமொழியின் இடையில் நிற்கும் ஆய்தம் கெடும். [எ-டு]

அஃது+கடிது → அஃது+கடிது → அதுகடிது (வன்கணம்)
அஃது+ஞான்றது → அஃது+ஞான்றது → அது ஞான்றது (மென்கணம்)
அஃது+யாது → அஃது யாது → அதுயாது (இடைக்கணம்) (19)

## இயல்பாகப் புணரும் குற்றியலுகரத் தொடர்கள்

**426. அல்லது கிளப்பினும் எல்லா மொழியும்**
**சொல்லிய பண்பின் இயற்கை ஆகும்.**

**[இ-ள்]** நெடில்தொடர் முதலாகிய அறுவகைக் குற்றியலுகரமும் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன் வல்லெழுத்துக்களை முதலாக உடைய சொற்கள் வந்து அல்வழிப் பொருண்மையில் புணரும். அப்புணர்ச்சி ஆசிரியர் கூறிய முறைப்படி இயல்பாய் முடியும் பண்பினை உடையதாகும். **[எ-டு]**

நாகு+கடிது → நாகுகடிது; வரகு+கடிது → வரகுகடிது
தெள்கு+கடிது → தெள்குகடிது; எஃகு+கடிது → எஃகுகடிது
குரங்கு+கடிது → குரங்குகடிது (20)

## வல்லெழுத்து மிகும் குற்றியலுகரத் தொடர்

**427. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே.**

**[இ-ள்]** வன்தொடர்க் குற்றியலுகரம் நிலைமொழியாய் நின்று வல்லின வருமொழியோடு அல்வழிப் பொருண்மையில் புணரும். அவ்விடத்து வருமொழிக்கேற்ற வல்லெழுத்து மிக்கு முடியும். **[எ-டு]**

கொக்கு+கடிது → கொக்குக்கடிது
கொக்கு+பறந்தது → கொக்குப்பறந்தது (21)

## வல்லெழுத்து மிகும் மென்தொடர் குற்றியலுகரச் சொற்கள்

**428. சுட்டுச்சினை நீடிய மென்தொடர் மொழியும்[1]**
**யாவினா முதலிய மென்தொடர் மொழியும்[2]**
**ஆயியல் திரியா வல்லெழுத்து இயற்கை.**

**[இ-ள்]** *1.* சுட்டாகிய அ, இ, உ என்னும் உறுப்பெழுத்துக்கள் நீண்டு ஒலிக்கும் மென்தொடர்க் குற்றியலுகர ஈறுகள் ஆங்கு, ஈங்கு, ஊங்கு என்பன *2.* யா என்னும் வினாவெழுத்தினை முதலாக உடைய மென்தொடர்க் குற்றியலுகர ஈறு யாங்கு என்பதாகும். இந்நான்கு குற்றியலுகரச் சொற்களும் நிலைமொழியாய் நின்று வல்லெழுத்தை முதலாக உடைய சொற்களுடன் புணரும். அவ்விடத்து மேற்கூறிய வல்லெழுத்து மிக்கு முடியும் இயல்பில் மாறாமல் நிற்கும். **[எ-டு]**

அங்கு → ஆங்கு
இங்கு → ஈங்கு } + கொண்டான் } ஆங்குக் கொண்டான், ஈங்குக் கொண்டான், ஊங்குக் கொண்டான்
உங்கு → ஊங்கு

யாங்கு+கொண்டான் → யாங்குக் கொண்டான் (22)

**'யாங்கு' என்னும் சொல் இயல்பாகப் புணர்தல்**

**429. யாவினா மொழியே இயல்பும் ஆகும்.**

**[இ-ள்]** 'யாங்கு' என்னும் வினாச்சொல் நிலைமொழியாக நின்று புணரும். அப்போது மேற்கூறப்பட்ட 'வல்லெழுத்து மிகாமல் இயல்பாகவும் நிற்கும். **[எ-டு]**

யாங்கு + கொண்டான் → யாங்கு கொண்டான்

யாங்கு → இஃது எப்படி என்னும் வினாப்பொருளைத் தரும். ***(23)***

**ஏற்றயல் திரியாக் குற்றியலுகரச் சொற்கள்**

**430. அந்நான் மொழியும் தம்நிலை திரியா.**

**[இ-ள்]** மேற்கூறப்பட்ட ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு என்னும் நான்கும் நிலைமொழியாய் நின்று புணரும். அவ்விடத்து அச்சொற்களின் இடையில் உள்ள மெல்லினம் (ங்) முற்கூறப்பட்ட விதிப்படி (நூ.415) வல்லினமாகத் திரியாது. **[எ-டு]**

ஆங்கு+கொண்டான் → ஆங்குக்கொண்டான்

**விளக்கம்**

ஆங்கு முதலிய நான்கும் மென்தொடர் மொழிகள். அம்மென்தொடர்ச் சொற்களாகிய குரங்கு, எண்கு, அன்பு என்பன குரக்கு, எட்கு, அற்பு எனத் திரிந்தாற் போல (நூ.415) ஆங்கு முதலானவை ஆக்கு முதலாகத் திரியாது. ***(24)***

**'உண்டு' என்னும் சொல் புணரும் முறை**

**431. உண்டுஎன் கிளவி உண்மை செப்பின்**
**முந்தை இறுதி மெய்யொடும் கெடுதலும்[1]**
**மேல்நிலை ஒற்றே ளகாரம் ஆதலும்[2]**
**ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே[3]**
**வல்லெழுத்து வரூஉம் காலை யான.**

**[இ-ள்]** உள்ளது (உண்மை) என்னும் பொருளை உணர்த்துவது உண்டு என்னும் மென்தொடர்க் குற்றியலுகரச் சொல்லாகும். இச்சொல் நிலைமொழியாய் நின்று வல்லின வருமொழிகளோடு புணரும். 1.அந்நிலையில் நிலைமொழியின் ஈற்றில் அமைந்த உகரம் தான் ஏறிய டகார மெய்யொடும் (ட்+உ= டு) கெடும் 2.அதற்கு முன் நிற்கும் ணகர மெய் (ண்) ளகர மெய்யாகத் (ள்) திரியும் 3.இவ்விரு விதிகளையும் பெற்று நடப்பதற்கு உரிமை உடையதாய் உண்டு என்னும் சொல் திகழும். **[எ-டு]**

உண்டு+பொருள் → உண்~~டு~~+பொருள் → உண்+பொருள் →
உள்+பொருள் → உள்பொருள்

வருமொழி முதலில் பகரம் நீங்கலான ஏனைய சொற்கள் வந்தால் ஈறு கெடாமல் இயல்பாகவும் புணரும்.

உண்டு+காணம் → உண்டுகாணம் (வன்கணம்)
உண்டு+ஞாண் → உண்டு ஞாண் (மென்கணம்)
உண்டு+யாழ் → உண்டு யாழ் (இடைக்கணம்)
உண்டு+அடை → உண்டு அடை (உயிர்க்கணம்) (25)

## குற்றியலுகர ஈற்றுத் திசைப் பெயர்கள் புணர்தல்

**432. இருதிசை புணரின் ஏஇடை வருமே.**

[இ-ள்] திசையைக் குறிக்கும் குற்றியலுகர ஈற்றுப்பெயர்கள் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன் திசைகளைக் குறிக்கும் பெயர் வருமொழியாய் அமையும். அவை இரண்டும் புணரும்போது இடையில் 'ஏ' என்னும் சாரியை வரும். [எ-டு]

வடக்கு+தெற்கு → வடக்கு+ஏ+தெற்கு → வடக்கேதெற்கு
கிழக்கு+மேற்கு → கிழக்கு+ஏ+மேற்கு → கிழக்கே மேற்கு

### விளக்கம்

வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்பன நான்கும் பெருந்திசையைக் குறிக்கின்ற பெயர்களாகும். இவை அனைத்தும் வன்தொடர்க் குற்றியலுகரத்தை ஈறாகக் கொண்ட சொற்களாகும். இந்நான்கனுள் இரண்டு திசைகள் ஒன்றோடொன்று (உம்மைத்தொகையாகப்) புணரும். (வடக்கும் தெற்கும்; கிழக்கும் மேற்கும் என்பன உம்மைத் தொகைகள்). (26)

## திசைப் பெயரொடு திசைப்பெயர் (கோணத்திசை) புணர்தல்

**433. திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் இறுதியும்**
**கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்[1]**
**ஒற்றுமெய்த் திரிந்து னகாரம் ஆகும்**
**தெற்கொடு புணரும் காலை யான[2].**

[இ-ள்] இரண்டு பெருந்திசைகள் புணர இடப்பொருளை உணர்த்தும் கோணத்திசைகள் உருவாகும். அப்புணர்ச்சியில் 1.நிலைமொழியின் இறுதியும் (குற்றியலுகரம் தான் ஏறி நின்ற வல்லெழுத்தும்) அதன் அயலெழுத்தும் (க்கு) கெடும் என்று சொல்லுவர் புலவர் 2.தெற்கு என்னும் பெயர் நிலைமொழியாய் நின்று புணரும். அவ்விடத்துக் குற்றியலுகரம் தான் ஏறி நின்ற மெய்யொடும் கெடும். அதன் அயல் எழுத்தாகிய றகர ஒற்று (ற்) னகர ஒற்று (ன்) ஆகத் திரியும். [எ-டு]

வடக்கு+கிழக்கு →வடக்கு+கிழக்கு →வட+கிழக்கு →வடகிழக்கு
வடக்கு+மேற்கு →வடக்கு+மேற்கு →வட+மேற்கு →வடமேற்கு
} 'க்கு' கெட்டன.

தெற்கு+கிழக்கு → தெற்கு+கிழக்கு → தெற்+கிழக்கு → தென்கிழக்கு } றகரம்
தெற்கு+மேற்கு → தெற்கு+மேற்கு → தெற்+மேற்கு → தென்மேற்கு } னகரமாதல்

வடக்கு முதலிய நான்கும் பெருந்திசைகள்
வடகிழக்கு முதலிய நான்கும் கோணத்திசைகள்.

(27)

## குற்றியலுகர எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி

### பத்தன் முன் எண்ணுப் பெயர்கள் வருதல்

434. **ஒன்று முதலாக எட்டன் இறுதி**
**எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்**
**குற்றிய லுகரம் மெய்யொடும் கெடுமே**
**முற்றஇன் வரூஉம் இரண்டுஅலங் கடையே.**

[இ-ள்] பத்து என்பது வன்தொடர்க் குற்றியலுகர எண்ணுப் பெயராகும். இப்பெயர் நிலைமொழியாக நின்று ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்ணுடன் புணரும். அவ்விடத்து நிலைமொழியின் ஈற்றில் உள்ள உகரம் தான் ஏறி நிற்கும் தகர ஒற்றுடன் (து) கெடும். இடையில் இன் சாரியை வரும். இச்சாரியை பெறும் நிலை இரண்டு என்னும் எண்ணிற்கு மட்டும் பொருந்தாது. [எ-டு]

பத்து + ஒன்று → பத்து + ஒன்று → பத் + ஒன்று → பத் + இன் + ஒன்று → பதின் + ஒன்று → பதினொன்று

பத்து + எட்டு → பத்து + எட்டு → பத் + எட்டு → பத் + இன் + எட்டு → பதின்+எட்டு → பதினெட்டு

பதினொன்று முதலாக வரும் அனைத்தும் உம்மைத் தொகையாகும். இவை பத்தும் ஒன்றும்......, பத்தும் எட்டும் என எண்ணுதற்குரிய பொருளில் வருகின்ற உம்மைகளாகும். (28)

### பத்தொடு 'இரண்டு' புணரும் முறை

435. **பத்தன்ஒற் றுக்கெட னகாரம் இரட்டல்**
**ஒத்தது என்ப இரண்டுவரு காலை.**

[இ-ள்] பத்து என்னும் எண்ணின் முன் இரண்டு என்னும் எண்ணுப்பெயர் வந்து புணரும். அவ்விடத்து நிலைமொழியின் இறுதி எழுத்து உகரத்தொடும் (து) கெடும். இடை நிற்கும் தகர ஒற்றுக் (த்) கெட அவ்விடத்தில் னகர ஒற்று இரட்டித்து (ன்ன்) நிற்பது பொருந்திய முடிபாகும். [எ-டு]

பத்து + இரண்டு → பத்து + இரண்டு → பத் + இரண்டு → ப + இரண்டு → பன்ன்+இரண்டு → பன்னிரண்டு (29)

### பத்தொடு ‘ஆயிரம்’ புணர்தல்

436. **ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது.**

**[இ-ள்]** பத்து என்னும் நிலைமொழியுடன் ஆயிரம் என்னும் சொல் வந்து புணரும். அவ்விடத்தும் மேற்கூறிய விதிப்படி நிலைமொழி திரியும். (நிலைமொழியின் ஈற்றெழுத்துக் கெடும். இன் சாரியை தோன்றும்.) **[எ-டு]**

பத்து+ஆயிரம் → பத்து+ஆயிரம் → பத்+இன்+ஆயிரம்
பதின்+ஆயிரம் → பதினாயிரம்

தற்காலத்தில் பத்தின் முன்வரும் ஆயிரம் இன் சாரியை பெறாமல் பத்தாயிரம் என வழங்கப்படுகிறது. *(30)*

### நிறை, அளவுப் பெயர்கள் பத்தொடு புணர்தல்

437. **நிறையும் அளவும் வரூஉம் காலையும்**
**குறையாது ஆகும் இன்னென் சாரியை.**

**[இ-ள்]** பத்து என்னும் எண்ணுப்பெயர் நிலைமொழியாய் நிற்கும். அதன் முன்னர் நிறைப்பெயர், அளவுப்பெயர் ஆகிய இரண்டும் வந்து புணரும். அப்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈறு முழுவதும் கெடும். அவ்விடத்து ‘இன்’ சாரியை தவறாமல் வந்து பொருந்தும். **[எ-டு]**

பத்து+கழஞ்சு → பத்து+கழஞ்சு → பத்+இன்+கழஞ்சு → பதின்+கழஞ்சு → பதின்கழஞ்சு (நிறைப்பெயர்)

பத்து+கலம் → பத்து+கலம் → பத்+இன்+கலம் → பதின்+கலம் → பதின்கலம் (அளவுப்பெயர்) *(31)*

### ஒன்று முதலிய எண்ணுப் பெயர்களோடு பத்துப் புணர்தல்

438. **ஒன்றுமுதல் ஒன்பான் இறுதி முன்னர்**
**நின்ற பத்தன் ஒற்றுக்கெட ஆய்தம்**
**வந்துஇடை நிலையும் இயற்கைத்து என்ப**
**கூறிய இயற்கை குற்றிய லுகரம்**
**ஆறன் இறுதி அல்வழி யான.**

**[இ-ள்]** ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணுப்பெயர்கள் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன் பத்து என்பது வந்து புணரும். அப்புணர்ச்சியில் வருமொழியாகிய பத்தில் உள்ள தகர ஒற்றுக் (த்) கெட அவ்விடத்து ஆய்தம் (ஃ) தோன்றும். ஆறு என்னும் எண்ணுப்பெயரில் உள்ள ஈற்றெழுத்து (று) கெடாது. எஞ்சிய எண்ணுப் பெயர்களின் நிலைமொழியின் ஈற்றில் உள்ள குற்றியலுகரம் தான் ஏறி நிற்கும் மெய்யெழுத்தொடும் கெடும். **[எ-டு]**

ஒன்று+பத்து → ஒன்று+பத்து → ஒன்று+பஃது → ஒருபஃது
இரண்டு + பத்து → இரண்டு+பத்து → இரண்டு +பஃது → இருபஃது
*(32)*

**பத்தொடு புணரும் ஒன்று, இரண்டுக்குப் பொது விதி**

**439. முதலீர் எண்ணின்ஒற்று ரகரம் ஆகும்**
**உகரம் வருதல் ஆவயி னான.**

**[இ-ள்]** ஒன்று, இரண்டு என்பன மென்தொடர்க் குற்றியலுகர எண்ணுப் பெயர்களாகும். அவை நிலைமொழியாக நின்று பத்து என்னும் பெயருடன் புணரும். அவ்விடத்து நிலைமொழியின் ஈற்றில் உள்ள குற்றியலுகரம் தான் ஏறிய மெய்யொடும் (ற்+உ; ட்+உ) கெடும். அதன் அயலெழுத்தாகிய ன்,ண் என்னும் ஒற்றுக்கள் இரண்டும் ரகரமாகத் திரியும். அந்த ரகர மெய்யின் மீது உகரம் வந்து புணரும். **[எ-டு]**

ஒன்று + பத்து → ஒன்று+பத்து → ஒன்+பத்து → ஒர்+பத்து
ஒர்+உ +பத்து → ஒரு+பத்து → ஒருபஃது (33)

**பத்தொடு புணரும் இரண்டிற்குச் சிறப்பு விதி**

**440. இடைநிலை ரகரம் இரண்டுஎன் எண்ணிற்கும்**
**நடைமருங்கு இன்றே பொருள்வயி னான.**

**[இ-ள்]** இரண்டு என்னும் எண்ணுப்பெயர் பத்துடன் புணரும். அப்போது மேற்கூறப்பட்ட விதியைப் பொருந்தி நடக்கும். நிலைமொழியில் கெடாமல் இடையில் நின்ற ரகர உயிர்மெய் (ர) முற்றிலும் கெடும். **[எ-டு]**

இரண்டு+பத்து → இரண்டு+பத்து → இரண்+பத்து →
இரரு+பத்து → இரு+பத்து → இருபஃது. (34)

**பத்தொடு புணரும் மூன்று, ஆறுக்குச் சிறப்பு விதி**

**441. மூன்றும்[1] ஆறும்[2] நெடுமுதல் குறுகும்**
**மூன்றன் ஒற்றே பகாரம் ஆகும்.**

**[இ-ள்]** *1.* மூன்று என்பது மென்தொடர்க் குற்றியலுகரம் 2. ஆறு என்பது நெடில் தொடர்க் குற்றியலுகரம். இவ்விரு சொற்களும் (மூன்று, ஆறு) நிலைமொழியாய் நின்று பத்து என்பதோடு புணரும். அப்புணர்ச்சியில் நிலைமொழிகளின் முதலில் நிற்கும் நெட்டெழுத்துக்கள் குற்றெழுத்துக்களாகும். மூன்று என்பதில் உள்ள னகர ஒற்று (ன்) பகர ஒற்றாகத் (ப்) திரியும். **[எ-டு]**

மூன்று+பத்து→மூன்று+பத்து →முன்+பத்து→முப்+பத்து→முப்பஃது
ஆறு+பத்து → ஆறு+பத்து → அறு+பத்து → அறுபஃது (35)

**நான்கன் ஒற்று (ன்) றகரம் (ற்) ஆதல்**

**442. நான்கன் ஒற்றே றகரம் ஆகும்.**

**[இ-ள்]** நான்கு என்னும் பெயர் பொது விதிப்படி (நூ.438) ஈற்று உயிர்மெய் (கு) கெட்டுப் பத்து என்னும் வருமொழியோடு புணரும்.

அவ்விடத்து ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தாகிய னகர ஒற்று (ன்) றகர ஒற்றாய் (ற்) மாற்றமடையும். [எ-டு]

நான்கு + பத்து → நான்கு+பத்து → நான்+பத்து → நாற்+பத்து → நாற்பஃது (36)

### ஐந்தன் ஒற்று (ந்) மகரம் (ம்) ஆதல்

**443. ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும்.**

[இ-ள்] ஐந்து என்பது பொது விதிப்படி (நூ.438) ஈற்று உயிர்மெய் (து) கெட்டு நிற்கும். அதன் அயலெழுத்தாகிய நகர ஒற்று (ந்) மகர ஒற்றாக (ம்) மாறிப் பத்துடன் புணரும். [எ-டு]

ஐந்து+பத்து → ஐந்து+பத்து → ஐந்+பத்து → ஐம்+பத்து → ஐம்பஃது (37)

### எட்டன் ஒற்று (ட்) ணகரம் (ண்) ஆதல்

**444. எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும்.**

[இ-ள்] எட்டு என்பது பொது விதிப்படி (நூ. 438) ஈற்று உயிர்மெய் (டு) கெட்டுப் பத்தொடு புணரும். அவ்விடத்து எட்டு என்பதன் ஈற்றயல் எழுத்தாகிய டகர ஒற்று (ட்) ணகர ஒற்றாகத் (ண்) திரியும். [எ-டு]

எட்டு +பத்து → எட்டு+பத்து → எட்+பத்து → எண்+பத்து → எண்பஃது (38)

### தொண்ணூறு (ஒன்பது X பத்து) சொற்புணர்ச்சி

**445. ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்[1]**
**முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்[2]**
**பஃதுஎன் கிளவி ஆய்தபக ரம்கெட[3]**
**நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி[4]**
**ஒற்றிய தகரம் றகாரம் ஆகும்.[5]**

[இ-ள்] ஒன்பஃது என்பது ஆய்தத்தொடர்க் குற்றியலுகர எண்ணுப்பெயராகும். இது நிலைமொழியாக நின்று பஃது என்னும் ஆய்தத்தொடர்க் குற்றியலுகர எண்ணுப் பெயருடன் புணரும். அவ்விடத்து 1.ஒன்பது என்னும் நிலைமொழியில் உள்ள ஒகர உயிருக்கு முன்னாக ஒரு தகர ஒற்றுத் (த்) தோன்றும் 2.ஒன்பது என்பதில் உள்ள னகர மெய் (ன்) ணகார மெய்யாக இரட்டிக்கும் (ண்ண்) 3.வருமொழியாகிய பஃது என்பதில் உள்ள பகர உயிர்மெய்யும் ஆய்தமும் கெடும் (பஃது) 4.இரட்டித்து நிற்கும் ணகரத்தின் பின் ஊகாரம் (ஊ) வந்து புணரும் 5.பின் வருமொழியில் எஞ்சி நின்ற உகரத்துடன் கூடிய தகர ஒற்று (து) றகர ஒற்றாகத் திரியும் (று). [எ-டு]

ஒன்பஃது + பஃது
த்+ஒன்பஃது+பஃது (தகர ஒற்றுத் தோன்றல்)
தொன்பஃது+பஃது (நிலைமொழியின் பஃது கெடல்)
தொன் (ண்ண்)+பஃது (ன - ணகரமாகத் திரிந்து இரட்டுதல்)
தொண்ண்+பஃது (வருமொழி பகரமும் ஆய்தமும் கெடுதல்)
தொண்ண்+ஊ+து (ஊகாரம் தோன்றல்)
தொண்ணூ(து)+த்உ → ற்உ (று) உகரத்துடன் கூடி நிற்கும்
தொண்ணூறு. 'தகர' ஒற்று 'றகர' ஒற்றாதல்)

### விளக்கம்

நிலைமொழியின் பஃது கெடுதல்: இந்நூற்பாவில் பஃதுஎன் கிளவி என முதலில் கூறிய ஆசிரியர் அதனை அடுத்து ஆய்த பகரம் கெடும் எனக் குறிப்பிடுகிறார். பகர ஆய்தம் என்பதை ஆய்த பகரம் எனக் கூறுவது முன் சொன்ன முறைக்கு மாறானது. எனவே நிலைமொழியின் ஆய்தத்தையும் பகரத்தையும் கெடுக்க வேண்டும் என்பது உரையாசிரியர்கள் கருத்து. பஃது என்பதில் உள்ள து பொதுவிதிப்படி கெட்டது (நூ.438). *(39)*

## எண்ணுப்பெயர் முன் அளவு, நிறைப் பெயர்கள் புணர்தல்

**446. அளந்துஅறி கிளவியும் நிறையின் கிளவியும்**
**கிளந்த இயல தோன்றும் காலை.**

**[இ-ள்]** ஒன்று முதல் ஒன்பது ஈறாகிய எண்ணுப்பெயர்கள் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன் அளந்து அறியப்படும் அளவுப்பெயர், நிறைப்பெயர் ஆகியவை வருமொழியாக வரும். அந்நிலையில் அவை முற்கூறிய எண்ணுப் பெயர்களின் விதிகளுக்கு (நூ.438 - 444)ஏற்பப் புணரும். **[எ-டு]**

ஒன்று+கலம் → ஒருகலம்
இரண்டு+கலம் → இருகலம் } அளவுப்பெயர்

ஒன்று+கழஞ்சு → ஒருகழஞ்சு
இரண்டு+கழஞ்சு → இருகழஞ்சு } நிறைப்பெயர் *(40)*

## மூன்றோடு அளவு, நிறைப் பெயர்கள் புணர்தல்

**447. மூன்றன் ஒற்றே வந்தது ஒக்கும்.**

**[இ-ள்]** அளவுப்பெயர், நிறைப்பெயர் ஆகியவை வருமொழியாக வரும். அவ்விடத்து நிலைமொழியாய் நிற்கும் மூன்று என்பதன் னகர ஒற்று (ன்) வருமொழிக்கு ஏற்பத் திரியும். **[எ-டு]**

மூன்று+கலம் → மூன்+கலம் → முன்+கலம் → முக்கலம் (அளவு)
மூன்று+கழஞ்சு → மூன்+கழஞ்சு → முன்+கழஞ்சு → முக்கழஞ்சு (நிறை) *(41)*

### அளவு, நிறைப் பெயர்கள் ஐந்தோடு புணர்தல

**448. ஐந்தன் ஒற்றே மெல்லெழுத்து ஆகும்.**

**[இ-ள்]** ஐந்து என்னும் எண்ணுப்பெயர் அளவு, நிறைப் பெயர்களோடு புணரும். அப்போது இடையில் உள்ள நகர ஒற்று (ந்) வரும் வல்லெழுத்துக்கு ஏற்ப மெல்லெழுத்தாகத் திரியும். **[எ-டு]**

ஐந்து +கலம் → ஐந்து+கலம் → ஐந் +கலம் → ஐங்கலம் (அளவு)
ஐந்து + கழஞ்சு → ஐந்து + கழஞ்சு → ஐந் + கழஞ்சு → ஐங்கழஞ்சு (நிறை) **(42)**

### மூன்றும் ஐந்தும் இனவொற்றுப் பெறுதல்

**449. க ச த ப முதன்மொழி வரூஉம் காலை.**

**[இ-ள்]** மேற்கூறப்பட்ட மூன்று (நூ.447), ஐந்து (நூ.448) என்னும் எண்ணுப்பெயர்கள் நிலைமொழியாக நின்று வருமொழிகளோடு புணரும். அப்போது க, ச, த, ப என்னும் வல்லெழுத்துக்கள் வந்தால் மூன்று என்பது வரும் எழுத்துக்கேற்ற வல்லெழுத்தைப் பெறும். ஐந்து என்பது வரும் வல்லினத்துக்கேற்ற மெல்லினத்தைப் பெறும். **[எ-டு]**

மூன்று+சாடி → மூன்று+சாடி → முன்+சாடி → முச்சாடி } வல்லினம்
மூன்று+தொடி→மூன்று+தொடி→முன்+தொடி→முத்தொடி } பெறுதல்

ஐந்து+சாடி → ஐந்து+சாடி → ஐந்+சாடி → ஐஞ்சாடி } மெல்லினம்
ஐந்து+தொடி→ஐந்து+தொடி→ஐந்+தொடி→ஐந்தொடி } பெறுதல்

**(43)**

### எட்டின் முன் அளவு, நிறைப் பெயர்கள் வருதல்

**450. ந[1]ம[2]வ[3] என்னும் மூன்றொடு சிவணி**
**அகரம்[4] வரினும் எட்டன்முன் இயல்பே.**

**[இ-ள்]** எட்டு (எண்) என்பது நிலைமொழியாய் நிற்கும். வருமொழியாய் 1.ந 2.ம 3.வ என்னும் மெய்யெழுத்துக்களையும் 4.அ என்னும் உயிரெழுத்தையும் முதலாக உடைய அளவுப்பெயர், நிறைப்பெயர் வந்து புணரும். அவ்விடத்து முற்கூறப்பட்ட விதிப்படி (நூ.444) எண் என்பது நிலைமொழியாக நின்று இயல்பாக முடியும். **[எ-டு]**

1. எட்டு+நாழி → எட்டு+நாழி → எண்+நாழி → எண்நாழி } மென்
2. எட்டு+மண்டை→எட்டு+மண்டை→எண்+மண்டை→எண்மண்டை } கணம்

3. எட்டு+வட்டி→எட்டு+வட்டி→எண்+வட்டி→எண்வட்டி (இடைக்கணம்)
4. எட்டு+அகல் → எட்டு+அகல் → எண்+அகல் → எண்அகல் (உயிர்)

வரினும் என்பதில் அமைந்த உம்மையால் அகரம் மட்டுமின்றி உகரமும் வருமொழியாய் வந்து புணரும்.

எட்டு + உழக்கு → எட்டு + உழக்கு → எண்+உழக்கு → எண் உழக்கு
**(44)**

### ஐந்தும் மூன்றும் இனவொற்றுப் பெறுமிடம்

451. **ஐந்தும்[1] மூன்றும்[2] நமவரும் காலை**
**வந்தது ஒக்கும் ஒற்றுஇயல் நிலையே.**

[இ-ள்] 1.ஐந்து 2.மூன்று என்னும் எண்ணுப் பெயர்கள் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன் மெல்லெழுத்தாகிய ந, ம என்னும் முதன்மொழிகள் வந்து புணரும். அப்புணர்ச்சியில் வருமொழிக்கேற்ற ஒத்த ஒற்று வரும். [எ-டு]

1. ஐந்து + நாழி → ஐந்து + நாழி → ஐ + நாழி → ஐந்நாழி
ஐந்து + மண்டை → ஐந்து + மண்டை → ஐ + மண்டை → ஐம்மண்டை
2. மூன்று + நாழி → மூன்று + நாழி → முன் + நாழி → முந் + நாழி → மு + நாழி → முந்நாழி
மூன்று + மண்டை → மூன்று + மண்டை → முன் + மண்டை → மு + மண்டை → மும்மண்டை

ஐந்து என்பது ஐ (நூ.454) என நின்று வருமொழிக்கேற்ற (ஒத்த) மெய்யைப் பெற்றது. (45)

### மூன்றன் னகரம் (ன்) வகரம் (வ்) ஆதல்

452. **மூன்றன் ஒற்றே வகரம் வரும்வழித்**
**தோன்றிய வகரத்து உருவுஆ கும்மே.**

[இ-ள்] மூன்று என்பது நிலைமொழியாக நின்று வல்லெழுத்தை முதலாக உடைய வருமொழியோடு புணரும். அவ்விடத்து நிலைமொழியின் னகர ஒற்று (ன்) வகர ஒற்றாய்த் (வ்) திரியும். [எ-டு]

மூன்று + வட்டி → மூன்று + வட்டி → மூன் + வட்டி → மு + வ் + வட்டி → முவ்வட்டி (46)

### நான்கன் னகரம் (ன்) லகரம் (ல்) ஆதல்

453. **நான்கன் ஒற்றே லகாரம் ஆகும்.**

[இ-ள்] நான்கு என்பது நிலைமொழியாக நின்று வகர முதன் மொழியுடன் புணரும். அப்புணர்ச்சியில் நிலைமொழியின் னகர ஒற்று (ன்) லகர ஒற்றாய்த் (ல்) திரியும். [எ-டு]

நான்கு + வட்டி → நான்கு + வட்டி → நான் + வட்டி → நால் + வட்டி → நால்வட்டி (47)

### ஐந்து என்பதன் இடையொற்றுக் (ந்) கெடுமிடம்

454. **ஐந்தன் ஒற்றே முந்தையது கெடுமே.**

[இ-ள்] ஐந்து என்பது நிலைமொழியாக நிற்க வருமொழியில் வகரத்தை முதலாக உடைய சொல் வந்து புணரும். அந்நிலையில் நகர ஒற்றுக் (ந்) கெடும். [எ-டு]

ஐந்து + வட்டி → ஐந்து + வட்டி → ஐந் + வட்டி → ஐவட்டி

சிறுபான்மை நகர ஒற்றுக் கெடாமல் வகர ஒற்றாகத் திரியும். [எ-டு]
ஐந்து+வட்டி → ஐந்+வட்டி → ஐவ்+வட்டி → ஐவ்வட்டி (48)

### ஒரு, இரு என்பதன் முதலெழுத்து நீண்டொலித்தல்

**455. முதல்ஈர் எண்ணின்முன் உயிர்வரு காலைத்**
**தவல்என மொழிப உகரக் கிளவி**
**முதல்நிலை நீடல் ஆவயி னான.**

[இ-ள்] முதல் இரண்டு எண்ணுப் பெயர்களாகிய ஒன்று, இரண்டு (ஒரு, இரு) என்பன நிலைமொழியாக நிற்கும். அவற்றின் முன் உயிரெழுத்தை முதலாக உடைய சொற்கள் வந்து புணரும். அப்புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதியில் நிற்கும் (முற்றியல்) உகரம் முழுவதும் கெடும். அவ்விடத்து நிலைமொழியின் முதலெழுத்துக்களாகிய குற்றெழுத்துக்கள் நெட்டெழுத்துக்களாகி நீண்டொலிக்கும். [எ-டு]
ஒரு+அகல் → ஒர்உ → ஒர்+அகல் → ஓர்+அகல் → ஓரகல்
இரு+அகல் → இர்உ → இர்+அகல் → ஈர்+அகல் → ஈரகல்
ஒரு+உழக்கு → ஒர்உ → ஒர்+உழக்கு → ஓர்+உழக்கு → ஓருழக்கு

ஓர் அரசன், ஓர் உலகம்; ஒரு வீடு, ஒரு காசு (உயிர் முதன் மொழி வந்தால் ஓர் என்றும் மெய் முதன்மொழி வந்தால் ஒரு என்றும் எழுதுவதே இலக்கண முறையாகும்). (49)

### மூன்று, நான்கு, ஐந்து → உயிர் முதன் மொழியுடன் புணர்தல்

**456. மூன்றும்[1] நான்கும்[2] ஐந்து[3]என் கிளவியும்**
**தோன்றிய வகரத்து இயற்கை ஆகும்.**

[இ-ள்] 1.மூன்று 2.நான்கு 3.ஐந்து என்பன நிலைமொழியாய் நின்று உயிரெழுத்தை முதலாக உடைய வருமொழிகளுடன் புணரும். அவ்விடத்து முன்னர் வகர முதல் மொழிக்குக் கூறப்பட்ட (நூ. 452, 453, 454) விதிப்படி நிலைமொழி திரிபடையும். மூன்று (மூன்) என்பதில் உள்ள னகர ஒற்று வகர ஒற்றாகத் திரிந்து முடியும். நான்கு (நான்) என்பதில் உள்ள னகர ஒற்று லகர ஒற்றாகத் திரியும். ஐந்து (ஐந்) என்பதில் உள்ள நகர ஒற்றுக் கெடும். [எ-டு]

1. மூன்று+அகல் → மூன்+அகல் → முன்+அகல் → முவ்+அகல் → முவ்வகல்
2. நான்கு+அகல் → நான்+அகல் → நால்+அகல் → நாலகல்
3. ஐந்து+அகல் → ஐந்+அகல் → ஐ+அகல் → ஐயகல் (50)

### உழக்குடன் புணரும் மூன்றுக்குச் சிறப்பு விதி

**457. மூன்றன் முதல்நிலை நீடலும் உரித்தே**
**உழக்குஎன் கிளவி வழக்கத் தான.**

[இ-ள்] மூன்று என்னும் எண்ணுப்பெயர் நிலைமொழியாக நின்று உழக்கு என்னும் உயிரெழுத்தை முதலாக உடைய அளவுப் பெயருடன் புணரும். அப்பொழுது குறுகும் எனக் கூறப்பட்ட மூன்றின் முதலெழுத்துக் குறுகாமல் (நூ.441) நீண்டும் ஒலிக்கும். இவ்வாறு நிலைமொழியின் முதலெழுத்து நீண்டு ஒலித்தல் உழக்கு என்னும் சொல்லுக்கு மட்டுமே பொருந்தும். [எ-டு]

மூன்று+உழக்கு → மூன்+உழக்கு → மூ+உழக்கு → மூவுழக்கு (51)

## ஆறன் முதலெழுத்துக் குறுகாத இடம்

**458. ஆறுஎன் கிளவி முதல்நீ டும்மே.**

[இ-ள்] ஆறு என்னும் சொல் நிலைமொழியாக நின்று உயிரெழுத்தை முதலாக உடைய அளவுப் பெயருடன் புணரும். அப்புணர்ச்சியில் முதல் குறுகும் எனக் கூறப்பட்ட (நூ. 441) ஆறன் முதலெழுத்துக் குறுகாமல் முடியும். [எ-டு]

ஆறு+அகல் → ஆறகல்
ஆறு+உழக்கு → ஆறுழக்கு } இயல்பு (52)

## அளவு, நிறைப் பெயர்கள் ஒன்பதொடு புணர்தல்

**459. ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது**
**இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே.**

[இ-ள்] ஒன்பது என்னும் எண்ணுப்பெயர் நிலைமொழியாக நின்று அளவுப்பெயர், நிறைப்பெயர்களுடன் புணரும். அவ்விடத்து நிலைமொழியாகிய ஒன்பது என்னும் பெயரின் இறுதி எவ்விதத் திரிபும் இன்றி நிற்கும். இன் சாரியை பெற்று முடியும். [எ-டு]

ஒன்பது+கலம் → ஒன்பது+இன்+கலம் → ஒன்பதின்கலம் (அளவு)
ஒன்பது+கழஞ்சு → ஒன்பது+இன்+கழஞ்சு → ஒன்பதின்கழஞ்சு (நிறை) (53)

## ஒன்று முதல் ஒன்பதன் முன் நூறு புணர்தல்

**460. நூறுமுன் வரினும் கூறிய இயல்பே.**

[இ-ள்] ஒன்று முதல் ஒன்பது ஈறாகிய எண்ணுப்பெயர்கள் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன் நூறு என்னும் எண்ணுப் பெயர் வரும். அப்புணர்ச்சி முன் பத்து என்பதன் எண்ணுப் பெயர்கள் புணரும் வழிக் கூறிய இயல்புகளை (நூ.438 - 444) ஒத்து முடியும். [எ-டு]

ஒன்று+நூறு → ஒன்+நூறு → ஒர்+நூறு → ஒரு நூறு
இரண்டு +நூறு → இரண்+நூறு → இர்+நூறு → இருநூறு (54)

### மூன்றன் முன் நூறு புணர்தற்குச் சிறப்பு விதி

**461. மூன்றன் ஒற்றே நகாரம் ஆகும்.**

**[இ-ள்]** மூன்று என்னும் எண்ணுப்பெயர் நிலைமொழியாய் நின்று நூறு என்பதுடன் புணரும். அவ்விடத்து மூன்றில் உள்ள னகர ஒற்று நகர ஒற்றாகும். **[எ-டு]**

மூன்று+நூறு → முன்+நூறு → முந்நூறு (55)

### நூறுடன் புணரும் நான்கு, ஐந்துக்குச் சிறப்பு விதி

**462. நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா.**

**[இ-ள்]** நான்கு, ஐந்து என்பன நிலைமொழியாக நின்று வருமொழியாகிய நூறுடன் புணரும். அவ்விடத்து நிலைமொழியாகிய நான்கு, ஐந்தன் ஒற்றுக்கள் திரியாமல் புணரும். **[எ-டு]**

நான்கு+நூறு → நான்கு+நூறு → நான்+நூறு → நானூறு

நான் என்பதன் முன்வரும் நூறில் உள்ள நகர ஒற்று (ந்), னகரம் (ன்) ஆயிற்று (நூ.149).

ஐந்து+நூறு → ஐந்+நூறு → ஐந்நூறு (56)

### தொள்ளாயிரம் (ஒன்பது X நூறு) சொற்புணர்ச்சி

**463. ஒன்பான் முதல்நிலை முந்துகிளந் தற்றே[1]**
**முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்[2]**
**நூறுஎன் கிளவி நகார மெய்கெட[3]**
**ஊஆ ஆகும் இயற்கைத்து என்ப[4]**
**ஆயிடை வருதல் இகார ரகாரம்[5]**
**ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்[6].**

5 m
10 m

**[இ-ள்]** ஒன்பஃது என்னும் எண்ணுப்பெயர் நிலைமொழியாய் நிற்கும். அதனுடன் நூறு என்னும் சொல் வருமொழியாய் வந்து புணரும். 1.அவ் ஒன்பஃது என்னும் நிலைமொழியில் உள்ள ஒகர உயிருக்கு முன் மேற்கூறப்பட்டதைப் போல் (நூ.446) ஒரு தகரமெய் வரும் (த்+ஒன்பஃது) 2.அதனை அடுத்துள்ள எழுத்தாகிய னகர ஒற்று ளகர ஒற்றாக இரட்டிக்கும் (ள்ள்).

3.வருமொழியாகிய நூறு என்பதன் முதலில் நிற்கும் (ந்+ஊ) நகர மெய் கெடும் 4. ஊகாரம் ஆகாரம் ஆகும் இயல்பினை உடையது என்பர் 5.அம்மொழிகளின் இடையில் ஓர் இகரமும் ரகாரமும் வரும் 6. வருமொழியின் ஈறாகிய உகரம் ஏறிய றகரம் (று) முழுதும் கெடும். அவ்விடத்தில் ஒரு மகரம் ஒற்றாய் (ம்) வந்து முடியும். **[எ-டு]**

ஒன்பஃது + நூறு
ஒன்பஃது + நூறு → ஒன் + நூறு (நிலைமொழி பஃது கெட்டது)
த்ஒன் + நூறு (தகர ஒற்று நிலைமொழி முன் வருதல்)
தொன் + நூறு → தொள்ள் + நூறு
(னகர மெய் ளகரமெய்யாகி இரட்டித்தல்)
தொள்ள் + ந்ஊறு (வருமொழியில் நகர மெய் கெட்டது)
தொள்ள் + ஊஆறு (வருமொழியின் ஊகாரம் ஆகாரமாதல்)
தொள்ள் + ஆ + இர + று (ஆறு என்பதன் முன் இகரமும் ரகர உயிர்மெய்யும் வருதல்)
தொள்ள் + ஆஇரறும் (வருமொழியின் 'று' கெட்டு மகரம் தோன்றுதல்)
தொள்ளா + ய் + இரம் (யகர உடம்படுமெய் தோன்றுதல்)
தொள்ளாயிரம் (57)

## ஒன்று, இரண்டொடு ஆயிரம் புணர்தல்

464. **ஆயிரக் கிளவி வரூஉம் காலை**
**முதல்ஈர் எண்ணின் உகரம் கெடுமே.**

[இ-ள்] ஒன்று (ஒரு), இரண்டு (இரு) என்பன நிலைமொழியாக நிற்க அவற்றின் முன் ஆயிரம் வருமொழியாக வரும். அப்புணர்ச்சியில் நிலைமொழிகளின் உகரம் கெடும். [எ-டு]

ஒன்று + ஆயிரம் → ஒரு + ஆயிரம் → ஓர் + உ → ஓர் + ஆயிரம் → ஓராயிரம்; இரண்டு + ஆயிரம் → இரு + ஆயிரம் → இர் + உ → இர் + ஆயிரம் → இராயிரம் (58)

## ஒன்று, இரண்டன் முதல் நீளுதல்

465. **முதல்நிலை நீடினும் மானம் இல்லை.**

[இ-ள்] மேற்கூறிய (நூ. 464) ஒரு, இரு என்னும் நிலைமொழியின் முதலில் நிற்கும் குற்றெழுத்துக்கள் (ஒ, இ) நெட்டெழுத்துக்களாக (ஓ, ஈ) நீண்டொலிக்கும். அது குற்றம் ஆகாது. [எ-டு]

ஒன்று + ஆயிரம் → ஒரு + ஆயிரம் → ஓர் + உ → ஓர் + ஆயிரம் → ஓராயிரம்; இரண்டு + ஆயிரம் → இரு + ஆயிரம் → இர் + உ → ஈர் + ஆயிரம் → ஈராயிரம் (59)

## மூன்றொடு 'ஆயிரம்' புணர்தல்

466. **மூன்றன் ஒற்றே வகாரம் ஆகும்.**

[இ-ள்] மூன்று என்பது நிலைமொழியாய் நின்று ஆயிரத்தொடு புணரும். அவ்விடத்து மூன்று என்பதில் உள்ள னகர ஒற்று (ன்) வகர ஒற்றாகத் (வ்) திரியும். [எ-டு]

மூன்று + ஆயிரம் → மூன் → முன் → முவ் + ஆயிரம் → முவ்வாயிரம் (60)

## நான்கொடு 'ஆயிரம்' புணர்தல்

**467. நான்கன் ஒற்றே லகாரம் ஆகும்.**

**[இ-ள்]** நான்கு என்பது நிலைமொழியாக நின்று ஆயிரத்துடன் புணரும். அந்நிலையில் நான்கு என்பதில் உள்ள னகர ஒற்று (ன்) லகர ஒற்றாகத் (ல்) திரியும். **[எ-டு]**

நான்கு +ஆயிரம் → நான்→ நால் + ஆயிரம் → நாலாயிரம் **(61)**

## ஐந்தொடு 'ஆயிரம்' புணர்தல்

**468. ஐந்தன் ஒற்றே யகாரம் ஆகும்.**

**[இ-ள்]** ஐந்து என்பது நிலைமொழியாக நிற்க அதனுடன் ஆயிரம் என்பது வருமொழியாக வரும். அப்புணர்ச்சியில் ஐந்து என்பதில் உள்ள நகர ஒற்று(ந்) யகர ஒற்றாகத் (ய்) திரியும். **[எ-டு]**

ஐந்து + ஆயிரம் → ஐந் → ஐய் + ஆயிரம் → ஐயாயிரம் **(62)**

## ஆறொடு 'ஆயிரம்' புணர்தல்

**469. ஆறன் மருங்கில் குற்றிய லுகரம்**
**ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்.**

**[இ-ள்]** ஆயிரம் என்னும் வருமொழியின் முன் ஆறு என்பது நிலைமொழியாக நிற்கும். அவ்ஆறில் உள்ள றகரமெய் (ற்) கெடாது நிற்க அதன் மீதேறிய உகரம் மட்டும் கெட்டுப் புணரும். **[எ-டு]**

ஆறு+ஆயிரம் → ஆற்+உ → ஆற்+ஆயிரம் → ஆறாயிரம் **(63)**

## ஒன்பதொடு 'ஆயிரம்' புணர்தல்

**470. ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது**
**இன்பெறல் வேண்டும் சாரியை மரபே.**

**[இ-ள்]** ஒன்பது என்னும் எண்ணுப்பெயர் நிலைமொழியாக நிற்க அதனுடன் ஆயிரம் என்பது வருமொழியாகிப் புணரும். அப்புணர்ச்சியில் நிலைமொழியில் உள்ள ஈற்று உகரம் திரிந்து கெடாமல் நிற்கும். அவ்விடத்து முற்கூறிய மரபிற்கேற்ப (நூ.459) இன் சாரியை பெற்றுப் புணரும். **[எ-டு]**

ஒன்பது + ஆயிரம் → ஒன்பது + இன் + ஆயிரம் → ஒன்பதின் + ஆயிரம் → ஒன்பதினாயிரம்.

ஒன்பது என்பதில் உள்ள குற்றியலுகரம் இன் சாரியையோடு புணரும் போது கெடும். ஒன்பதாயிரம் என்பது தற்கால வழக்கு. **(64)**

## ஒன்று முதல் ஒன்பதன் முன் 'நூறாயிரம்' புணர்தல்

**471. நூறா யிரம்முன் வரூஉம் காலை**
**நூறுஎன் இயற்கை முதல்நிலைக் கிளவி.**

[இ-ள்] ஒன்று முதல் ஒன்பது ஈறாகிய எண்ணுப் பெயர்கள் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன் நூறாயிரம் என்னும் எண்ணுப்பெயர் வந்து புணரும். அப்புணர்ச்சி, முன்னர் ஒன்று முதல் ஒன்பது ஈறாகிய எண்கள் நூறு என்பதனோடு புணர்ந்ததைப் போலத் (நூ.460) திரிபு பெற்று முடியும். [எ-டு]

ஒன்று + நூறாயிரம் → ஒருநூறாயிரம்

(65)

## 'நூறு' முன் 'ஒன்று' முதலிய எண்கள் புணர்தல்

**472. நூறுஎன் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு**
**ஈறுசினை ஒழிய இனஒற்று மிகுமே.**

[இ-ள்] நூறு என்னும் எண்ணுப்பெயர் நிலைமொழியாக நிற்கும். அதன் முன் ஒன்று முதல் ஒன்பது ஈறாக உள்ள எண்ணுப்பெயர்கள் வந்து புணரும். அப்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்றில் உள்ள உகரம் கெடாமல் நிற்கும். அவ்உகரம் ஏறிய றகர ஒற்று இரட்டித்துப் (ற்ற்) புணரும். [எ-டு]

நூறு + ஒன்று → நூற்று + ஒன்று → நூற்றொன்று
நூறு + இரண்டு → நூற்று + இரண்டு → நூற்றிரண்டு

**விளக்கம்:** நூற்று என்பது வன்தொடர்க் குற்றியலுகரமாகும். இச்சொல்லின் முன் ஒன்று, இரண்டு என்பன வந்து புணரும் போது நிலைமொழியின் ஈறாகிய குற்றியலுகரம் கெடும். (66)

## நூறின் முன் ஒருபஃது முதலியன புணர்தல்

**473. அவைஊர் பத்தினும் அத்தொழிற்று ஆகும்.**

[இ-ள்] நூறு என்பது நிலைமொழியாக நிற்கும். அதன் முன் ஒன்று முதல் ஒன்பது ஈறாக அமைந்த எண்களுடன் கூடிய பத்து வருமொழியாக வரும். அப்புணர்ச்சியில் முற்கூறப்பட்டதைப் போல் நூறு என்பதன் உகரம் ஏறிய றகர ஒற்றின் இனஒற்று மிக்கு (இரட்டித்து) முடியும். [எ-டு]

நூறு + ஒருபஃது → நூற்று + ஒருபஃது → நூற்றொருபஃது
ஒன்று முதல் ஒன்பது ஊர்ந்த பத்து → ஒருபஃது ... ஒன்பஃது (67)

## நூறின் முன் அளவு, நிறைப் பெயர்கள் புணர்தல்

**474. அளவும்[1] நிறையும்[2] ஆயியல் திரியா**
**குற்றிய லுகரமும் வல்லெழுத்து இயற்கையும்**
**முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.**

[இ-ள்] நூறு என்னும் எண்ணுப்பெயர் நிலைமொழியாக நிற்கும். அதன் முன் 1. அளவுப் பெயரும் 2. நிறைப்பெயரும் வருமொழியாகிப் புணரும். அப்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்று உகரம் ஏறி நின்ற றகர ஒற்று (ற்) இரட்டித்துப் (ற்ற்) புணரும். முன்னர் வன்தொடர்

குற்றியலுகரத்துக்குக் கூறிய விதிப்படி (நூ.426) வல்லெழுத்து மிக்கு முடியும் தன்மையது என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

1. நூறு+கலம் → நூற்ற்+உ → நூற்று+கலம் → நூற்றுக்கலம் (அளவு)

2. நூறு+கழஞ்சு→நூற்ற்+உ→நூற்று + கழஞ்சு→நூற்றுக்கழஞ்சு (நிறை)

(68)

## ஒருபஃது முதலியவற்றுடன் ஒன்று முதலியன புணர்தல்

**475. ஒன்றுமுதல் ஆகிய பத்துஊர் கிளவி**
**ஒன்றுமுதல் ஒன்பாற்கு ஒற்றுஇடை மிகுமே**
**நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும்.**

[இ-ள்] ஒன்று முதல் எட்டு ஈறாகப் பத்தால் ஊரப்பட்ட எண்கள் (ஒரு பஃது ... எண்பஃது) நிலைமொழியாக நிற்கும். அவற்றின் முன் ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள சொற்கள் வருமொழியாகிப் புணரும். அப்புணர்ச்சியில் பஃது என்பதில் உள்ள ஆய்தம் (ஃ) கெடும். அவ்விடத்து ஈற்று மெய்க்கு இனவெழுத்தாகிய ஒரு தகர ஒற்று இடையில் தோன்றும். [எ-டு]

ஒருபஃது+ஒன்று → ஒருபஃது + ஒன்று → ஒருபது+ஒன்று
ஒருப+த்+து +ஒன்று → ஒருபத்தொன்று (69)

## ஒருபஃது முதலியவற்றுடன் ஆயிரம் புணர்தல்

**476. ஆயிரம் வரினே இன்னென் சாரியை**
**ஆவயின் ஒற்றுஇடை மிகுதல் இல்லை.**

[இ-ள்] ஒன்று முதல் ஒன்பது ஈறாகப் பத்தினை ஊர்ந்த சொற்கள் நிலைமொழியாய் நிற்கும். அதன் முன் ஆயிரம் வந்து புணரும். அவ்விரு சொற்களின் இடையில் இன் சாரியை தோன்றும். அப்புணர்ச்சியில் மேற்கூறப்பட்ட விதிப்படி (நூ.475) தகர ஒற்று இடையில் மிகாது. [எ-டு]

ஒருபஃது + ஆயிரம் → ஒருபது + ஆயிரம் → ஒருபது + இன் + ஆயிரம் → ஒருபதினாயிரம்

(70)

## ஒருபஃது முதலியவற்றுடன் அளவு, நிறைப் பெயர்கள் புணர்தல்

**477. அளவும் நிறையும் ஆயியல் திரியா.**

[இ-ள்] அளவுப்பெயரும் நிறைப்பெயரும் வருமொழியாக வந்து ஒருபஃது முதலான சொற்களுடன் புணரும். அப்புணர்ச்சியில் மேற்கூறப்பட்ட ஒருபஃது முதலான சொற்கள் ஆயிரத்தொடு புணரும் இயல்பினை ஒத்து (நூ.476) ஒற்று மிகாமல் இன் சாரியை பெற்று முடியும். [எ-டு]

ஒருபஃது+கலம் → ஒருபது+இன்+கலம் → ஒருபதின்கலம் (அளவு)
ஒருபஃது+கழஞ்சு → ஒருபது+இன்+கழஞ்சு → ஒருபதின்கழஞ்சு (நிறை)

(71)

## ஒன்றுடன் மூவினப் பொருட் பெயர்களும் புணர்தல்

478. **முதல்நிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்[1]**
**ஞநமத் தோன்றினும்[2] யவவந்(து) இயையினும்[3]**
**முதல்நிலை இயற்கை என்மனார் புலவர்.**

**[இ-ள்]** எண்ணுப்பெயர்களுள் முதல் எண்ணாக விளங்குவது ஒன்று. இச்சொல்லின் முன் 1.க,ச,த,ப என்னும் வல்லெழுத்துக்களை முதலாக உடைய சொற்கள் வருமொழியாய் நிற்கும் 2. ஞ, ந, ம என்னும் மெல்லெழுத்துக்களை முதலாக உடைய சொற்கள் தோன்றும் 3. ய, வ என்னும் இடையெழுத்துக்களை முதலாவதாகக் கொண்ட சொற்கள் வந்து பொருந்தும். அவ்விடங்களில் எல்லாம் ஒன்று என்பது ஒரு எனத் திரிந்து நின்ற இயல்பிலேயே புணரும் என்று சொல்லுவர் புலவர். **[எ-டு]**

1. ஒன்று+கல் → ஒருகல்; ஒன்று+படி → ஒருபடி
2. ஒன்று+ஞாண் → ஒருஞாண்; ஒன்று+மணி → ஒருமணி
3. ஒன்று+யாழ் → ஒருயாழ்; ஒன்று+வட்டு → ஒருவட்டு **(72)**

## ஒன்றுடன் 'உயிர்' முதலும் 'யா' முதலும் புணர்தல்

479. **அதன்நிலை உயிர்க்கும்[1] யாவரும் காலையும்[2]**
**முதல்நிலை ஒகரம் ஓஆ கும்மே[3]**
**ரகரத்து உகரம் துவரக் கெடுமே[4].**

**[இ-ள்]** ஒன்று என்னும் எண்ணின் திரிபாகிய ஒரு என்பது நிலைமொழியாக நிற்கும். அச்சொல்லின் முன் 1. உயிரெழுத்தை முதலாக உடைய சொற்களும் 2. யா என்னும் எழுத்தை முதலாக உடைய சொற்களும் வந்து புணரும் 3. அப்புணர்ச்சியில் ஒரு என்பதில் உள்ள ஒகரம் ஓகாரமாக நீளும் 4. இறுதியில் உள்ள உகரம் கெடும். **[எ-டு]**

ஒன்று+ஆடை → ஒரு+ஆடை → ஓர்+ஆடை → ஓர்ஆடை
ஒன்று+யானை → ஒரு+யானை → ஓர்+யானை → ஓர்யானை **(73)**

## எண்ணுப் பெயர்களோடு 'மா' (அளவுப்பெயர்) புணர்தல்

480. **இரண்டுமுதல் ஒன்பான் இறுதி முன்னர்**
**வழங்குஇயல் மாஎன் கிளவி தோன்றின்**
**மகர அளவொடு நிகரலும் உரித்தே.**

**[இ-ள்]** இரண்டு முதல் ஒன்பது ஈறாக உள்ள எண்ணுப்பெயர்கள் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன்னர் (மாமரத்தையும் விலங்கையும் குறிக்காத) மா என்னும் அளவுப்பெயர் வந்து புணரும். அப்புணர்ச்சியில் நிலைமொழியாகிய எண்ணுப்பெயர்கள் இயல்பாகவும் முடியும்.

அத்துடன் முன்பு மண்டை என்னும் அளவுப் பெயரின் புணர்ச்சியைப் போலத் (நூ.446) திரிந்தும் திரியாமலும் முடியும். [எ-டு]

இரண்டு+மா → இரண்டு மா; இருமா
மூன்று+மா → மூன்றுமா; மும்மா (74)

**வேற்றுமையில் ல, ன ஈறுகள் புணர்வதற்குப் புறனடை**

**481. லனஎன வரூஉம் புள்ளி இறுதிமுன்
உம்மும் கெழுவும் உளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான.**

[இ-ள்] லகாரத்தையும் னகாரத்தையும் ஈறாகக் கொண்ட சொற்கள் நிலைமொழியாக நிற்கும். அவற்றின் முன் உம், கெழு ஆகியவையும் அவற்றைப் போன்ற பிற சாரியைகளும் வரும். இலக்கண மரபிற்கேற்பப் புணர்ந்து நிற்கும் அச்சாரியைகள் செய்யுளில் சொற்களைத் தொடர்புபடுத்துவனவாய் அமையும். அச்சொற்கள் வேற்றுமை குறித்த புணர்ச்சியில் பொருள்பெற நிற்கும். [எ-டு]

வானவரி வில்லும் திங்களும் போல.

இத்தொடரில் அமைந்த வில்லும் (வில்+உம்) என்பதில் உம் என்னும் சாரியை இடம் பெற்றுள்ளது. இத்தொடருக்கு வில்லியைத் திங்கள் போல் என வேற்றுமைப் பொருள் கொள்ள வேண்டும்.

கல்கெழு கானவர் நல்குறு மகளே (குறுந்.71)

இத்தொடரில் கல் என்னும் லகர ஈற்றை அடுத்துக் கெழு என்னும் சாரியை இடம்பெற்றுள்ளது. மேற்கூறப்பட்ட தொடருக்குக் கல்லைப் பொருந்திய காடு என வேற்றுமைப் பொருள் கொள்ள வேண்டும். மேலும் மாநிதிக் கிழவனும் போன்ம் (அகம்.66) (கிழவனைப் போலும்) கான் கெழு நாடு (அகம்.97) (காட்டைப் பொருந்திய நாடு) என்பனவும் வேற்றுமைப்பொருள் தந்து நின்றன.

## விளக்கம்

லகர, னகர ஈற்றுச் சொற்கள் சாரியை பெறும் இடங்களை இந்நூற்பா கூறுகிறது. இதனைத் தொல்காப்பியர் புள்ளிமயங்கியலில் வைத்திருக்க வேண்டும். இந்நூற்பாவிற்கும் குற்றியலுகரப் புணரியலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆகையால் இந்நூற்பாவைப் புள்ளிமயங்கியலின் புறனடையாகக் கொள்வதே சிறப்புடையது. (75)

**நிலைமொழி, வருமொழியாகப் பிரித்துணர முடியாச் சொற்கள்**

482. **உயிரும் புள்ளியும் இறுதி ஆகிக்**
**குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி**
**நெறிப்பட வாராக் குறைச்சொல் கிளவியும்[1]**
**உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்**
**ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்[2]**
**செய்யும் செய்த என்னும் கிளவியின்**
**மெய்ஒருங்கு இயலும் தொழில்தொகு மொழியும்[3]**
**தம்இயல் கிளப்பின் தம்முன் தாம்வரூஉம்**
**எண்ணின் தொகுதி[4] உளப்படப் பிறவும்[5]**
**அன்னவை எல்லாம் மருவின் பாத்திய**
**புணரியல் நிலையிடை உணரத் தோன்றா.**

**[இ-ள்]** 1. உயிரையும் மெய்யையும் இறுதி எழுத்தாகக் கொண்டு குறிப்பு, பண்பு, இசை ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றுவன குறைச்சொற்கள் (உரிச்சொற்கள்) 2.உயர்திணை, அஃறிணை என்னும் இரண்டு திணையையும் ஆண், பெண், பலர், ஒன்று, பல என்னும் ஐந்து பால்களையும் அறிவதற்குரிய பண்பு மறைந்து வரும் மொழிகள் (பண்புத் தொகை) 3. செய்யும், செய்த என்னும் பெயரெச்சச் சொற்களில் விகுதிகள் மறைந்து நடக்கும் வினைச்சொற்கள் (வினைத்தொகை).

4.நிறுத்த சொல், குறித்து வருகிளவி என்னும் வேறுபாடின்றித் தமக்குத் தாமே வந்து புணரும் பெயர்கள் (எண்ணுப் பெயர்கள்) என்பன நான்கு வகைப்பட்ட தொடர்மொழிகளாகும். இவையும் 5.இவற்றைப் போன்ற பிறவும் வழக்கில் மருவி நடந்த இலக்கணத்தை உடையன. இச்சொற்களை நிலைமொழி, வருமொழியாகப் பிரித்துப் பார்த்தால் அவற்றின் புணர்ச்சி முடிபு வெளிப்படையாகத் தோன்றாது. எனவே அச்சொற்களைப் பிரித்துப் பார்க்காமல் உள்ளவாறே கொள்ள வேண்டும். **[எ-டு]**

1. விண் விணைத்தது - குறிப்பு
   கார் கருத்தது - பண்பு
   ஒல் ஒலித்தது - இசை

ஆகிய இம்மூன்றும் குறைச்சொற்களாகும். இவற்றுக்கு இடையில் என என்னும் சொல்லைச் சேர்த்து விண்ணென விணைத்தது, காரெனக் கருத்தது, ஒல்லென ஒலித்தது என்று புணர்க்கப்பட்டது. அவ் என என்னும் இடைச்சொல்லைச் சேர்க்காதவிடத்து விண்விணைத்தது முதலானவற்றை இரு சொற்களாகப் பிரித்துப் புணர்ச்சி விதி கூற முடியாது.

**2. கருஞ்சான்றான், கருங்குதிரை**

இவற்றில் உள்ள கருமை என்பது கரியனாகிய சான்றான் எனவும் கரிதாகிய குதிரை எனவும் நின்று உயர்திணை (கரியன்) அஃறிணைப் (கரியது) பொருள்களை உணர்த்தியது. ஆதலால் பொதுமையில் நின்று பண்புணர்த்தும் இப்பண்புத் தொகையை நிலைமொழி, வருமொழியாகப் பிரிக்கக்கூடாது.

**3. ஆடரங்கு**

இச்சொல் ஆடும் அரங்கு என எதிர்காலத்திற்கும் ஆடிய அரங்கு என இறந்த காலத்திற்கும் ஆடுகின்ற அரங்கு என நிகழ்காலத்திற்கும் உரியதாய் நிற்கிறது. மூன்று காலத்திற்கும் உரிய இப்பொதுச் சொல்லை ஒரு காலத்திற்குரிய நிலைமொழி, வருமொழியாகப் பிரித்துப் புணர்ச்சி விதி கூற முடியாது.

**4. பப்பத்து**

இச்சொல் பத்தும் பத்தும் என அல்வழிப் பொருளிலோ பத்தினை உடைய பத்து என வேற்றுமைப் பொருளிலோ அமையவில்லை. எனவே இதனை நிலைமொழி, வருமொழியாக்ப் பிரித்துப் புணர்ச்சி விதி கூற முடியாது.

**5. உண்டான், கரியன்**

இவற்றைப் பகுதி, விகுதியாக உண்+ஆன் எனவும் கருமை+அன் எனவும் பிரிக்க முடியும். ஆயினும் ஈற்றில் நிற்கும் ஆன், அன் என்பன வருமொழியாகா. அவை வந்து புணரும் தன்மையற்றதால் பிரித்துப் புணர்ச்சி விதி கூற முடியாத சொற்களாக நின்றன. **(76)**

**எழுத்ததிகாரப் புணர்மொழிகளுக்குப் புறனடை**

**483.** **கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்**
**வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்**
**விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்**
**வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்**
**நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்.**

**[இ-ள்]** புணரியல் முதலான ஆறு இயல்களிலும் சொற்களின் புணர்ச்சிக்கு இலக்கண விதிகள் கூறப்பட்டன. அவ்வாறு விதி கூறப்பட்ட சொற்களே அன்றிச் செய்யுளில் வேறுபிற சொற்களும் வரும். உலக வழக்கிலும் மருவி வேறுபடுகின்ற சொற்களும் உண்டு. அவற்றை அறிஞர்கள் தம்முடைய நுண்ணிய அறிவினால் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அச்சொற்களை உலக வழக்கோடும் செய்யுள்

வழக்கோடும் பொருத்திப் பார்த்துப் புதிய விதிகளை அமைத்துக் கொள்க என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

1. நறவு+கண்ணி (நறவங்கண்ணி)
2. கள்ளி+காடு (கள்ளியங்காடு)
3. புன்னை+கானல் (புன்னையங்கானல்)
4. பொன்+திகிரி (பொன்னந்திகிரி)
5. ஆர்+கண்ணி (ஆரங்கண்ணி)
6. கானல்+பெருந்துறை (கானலம்பெருந்துறை)

இவை வேற்றுமைப் பொருட் புணர்ச்சியில் 'அம்' என்னும் சாரியை பெற்றன.

வெதிர் என்னும் ரகர ஈற்றுச் சொல் அத்துச்சாரியை பெற்று முடிந்தது. [எ-டு] வெதிரத்து கால்பொரு நரலிசை.

முளா+மா (முளவுமா) பிணா+நாய் (பிணவு நாய்) என்பன அல்வழியில் ஈற்று ஆகரம் குறுகி உகரம் பெற்று முடிந்தன.

தட+திரை (தடவுத்திரை) அகர ஈற்று உரிச்சொல் உகரமும் வல்லெழுத்தும் பெற்று வந்தது.

ஆ+இடை (ஆயிடை) என்பது வகர ஈறு பெறாமல் யகர ஈறு பெற்று வந்தது.

தெவ்+முனை (தெம்முனை) என்பது வகரம் கெட்டு மகர ஒற்றுப் பெற்று முடிந்தது. (77)